21st March 1959]

(b) if so, what are the districts where such a conference was conducted; and

(c) what are the conclusions arrived at?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: (a) Yes, Sir.

(b) (1) North Arcot.

(2) Tanjore.

(3) Salem.

(4) Tirunelveli.

(5) Tiruchirappalli.

(c) The meetings with local M.L.As., merchants, etc., were convened to discuss the measures that should be taken to bring down the prices. It was decided to open fair price shops with the help of millers and merchants, wherever necessary, and to sell rice at reasonable rates.

SRI V. K. KOTHANDARAMAN: கேள்வியின் உபபிரிவு (ஏ)-க்கு ஆம் என்று கனம் அமைச்சர் அவர்கள் பதில் சொன்னார்கள். வட ஆற்காடு ஜில்லாவில் அந்த ஜில்லாவில் இருக்கக்கூடிய எம். எல்.ஏ.க்களைக்கொண்ட ஒரு மகாநாடு தான் நடைபெற்றதே ஒழிய, அரசியல் தலைவர்களைக் கலந்து ஒரு மகாநாடு நடை பெறவில்லை. ஆகவே, உணவுப் பிரச்னை மிகவும் முக்கியமான பிரச்னையாக இருப்பதினால், இதுபற்றி அரசியல் தலைவர்களையும் கலந்து செய்யப்படவில்லை. இருந்தாலும், எம்.எல்.ஏ.க்கள். . . .

MR. SPEAKER: கனம் அங்கத்தினர் நான் சொல்லுவதை கேட்கவில்லை. கேள்வி நேரத்தின்போது அங்கத்தினர் ஒரு பிரசங்கம் செய்கிறார்.

THE HON. SRI M. BHAKTAVATSALAM: வட ஆற்காடு மாவட்டத்தைப் பொறுத்தமட்டில், சட்டசபை அங்கத்தினர்கள் வெவ்வேறு கட்சியைச் சார்ந்தவர்கள் இருக்கிறார்கள். சட்டசபை பிரதிநிதிகளாக இருக்கிற எம்.எல்.ஏ.க்கள் அரசியல் கட்சித் தலைவர்கள் என்று நான் கருதுகிறேன்.

MR. SPEAKER: கனம் அங்கத்தினர் இதற்காக இவ்வளவு பெரிய ஒரு பிரசங்கம் செய்யவேண்டியதில்லை. அரசியல் கட்சித் தலைவர்கள் கலந்துகொள்ளப்பட்டார்களா என்று நேரிடையாக ஒரு கேள்வியைக் கேட்டால், ஒரு நிமிஷத்தில் முடிந்துபோகுமே ?

Supply of foodgrains to Harijan Hostels and Orphanages

* 920 Q.—SRI A. VEDARATHNAM: கனம் உள் விவகார அமைச்சர் அவர்கள் தயவுசெய்து பதிலளிப்பாரா—

(அ) ஹரிஜன ஹாஸ்டல்களுக்கும், அனாதை விடுதிகளுக்கும் அரசாங்கம் கொள்முதல் செய்து வைத்திருக்கும் உணவு தான்யத்திலிருந்தோ அல்லது குறைந்த விலைக்கோ தான்யங்கள் கிடைக்க ஏற்பாடு செய்ய உத்தேசமுண்டா ?

(ஆ) அப்படியானால், அதன் விபரம் என்ன ?

(இ) இல்லையானால், அந்த ஹாஸ்டல்களுக்கு தான்யங்கள் நியாய விலைக்கு எளிதில் கிடைக்க என்ன ஏற்பாடு செய்திருக்கிறார்கள் ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: (a) No, Sir.

(b) The question does not arise in view of the answer to clause (a) above.

(c) The Collectors and Grain Purchase Officers have been specially instructed to ensure that large-scale consumers of rice,

such as hostels, associations and other institutions get their requirements from the merchants at controlled rates. If it is brought to notice that any merchant is unwilling to sell his stocks at controlled rates, the stocks will be requisitioned without hesitation.

Sri A. VEDARATHNAM : தேவஸ்தான நெல்லிலிருந்து கண்டிரோல் ரேட்டுக்கு இந்த ஹாஸ்டல்களுக்கு கிடைக்கும்படி செய்ய வகை செய்ய முடியுமா ?

The Hon. Sri M. BHAKTAVATSALAM : தேவஸ்தானத்திலிருக்கிற நெல் என்பது மட்டுமல்ல. எங்கு இருந்தாலும், விற்கக்கூடிய தானியங்கள், அரிசியாக இருந்தாலும் சரி, நெல்லாக இருந்தாலும் சரி, சம்பந்தப்பட்டஸ்தாபனங்கள் கலெக்டர்களை அணுகினால், அவர்கள் வேண்டிய ஏற்பாடுகள் செய்துதருவார்கள். இப்பொழுது வியாபாரிகள் சில பேர்களுக்கு இந்த கண்டிரோல் பிடிக்காமல், அவர்கள் ஏதோ இல்லாத கஷ்டங்களையெல்லாம் எடுத்துச் சொல்லுகிறார்கள். மற்ற ஸ்தாபனங்கள் அதைப் பார்த்து மிரளக்கூடாது என்று இந்த சமயத்தில் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

Sri K. PERIANNAN : ஹரிஜன ஹாஸ்டல்களுக்கு வெளியில் சென்று உணவு தானியங்கள் வாங்குவதென்றால் அதிக சிரமம் ஏற்படுகிறது. அதனால் அவர்கள் உள்ளூரிலேயே வாங்குவதற்கு ஏற்பாடு செய்ய அரசாங்கம் யோசிக்குமா ?

The Hon. Sri M. BHAKTAVATSALAM : ஹரிஜன ஹாஸ்டல்களை நடத்துகிறவர்கள் அந்தந்த மாவட்ட கலெக்டர்களை அணுகி வேண்டிய ஏற்பாடுகள் செய்துகொள்ளலாம்.

Sri P. G. MANICKAM : ஹரிஜன ஹாஸ்டலில் படிக்கும் ஒரு மாணவருக்கு மாதாந்திர உபகாரச் சம்பளமாக 15 ரூபாய் கொடுக்கப்படுகிறது. அதைப் பிரித்துப் பார்த்தால் ஒரு நாளைக்கு 8 அணாவாகிறது. அந்த எட்டணாவை வைத்துக்கொண்டு சாமான்களையும் வாங்கிக்கொண்டு, மற்ற காய்கறிகளையும் வாங்கிக்கொண்டு, மூன்று வேளை சாப்பிடுவது என்பது முடியாத காரியம். ஆகவே, மற்ற ராஜ்யங்களிலிருந்து நமக்கு மான்யமாக கிடைக்கக்கூடிய தானியங்களில் ஒரு பகுதியை இலவசமாக கொடுப்பதுபற்றி அரசாங்கம் யோசிக்குமா ?

The Hon. Sri M. BHAKTAVATSALAM : நான் பொதுவாக குறை கூறவில்லை ஹரிஜன ஹாஸ்டல்கள் நடத்துபவர்களைப்பற்றி. அவர்கள் தங்களுக்கு கிடைக்கக் கூடியவருவாயை வைத்துக்கொண்டு சீராகநடத்தினால், இன்னும் செவ்வையாக நடத்தலாம் என்பது என்னுடைய சொந்த அபிப்பிராயம். இப்பொழுது விலைக் கட்டுப்பாடு செய்யப்பட்டிருப்பதால், மார்கட்டில் இதுவரை விற்றதைவிட குறைவான விலைக்கு இப்பொழுது கிடைக்கிறது. அதற்கு மேலே சலுகைகள் கொடுப்பதற்கு அவசியமில்லை.

Mr. SPEAKER : ஹரிஜன மான்யக் கோரிக்கை வரப்போகிறது. அதில் அங்கத்தினர்கள் ஏராளமாகப் பேசலாம்.

Import of rice from the Andhra State

* 921 *Q.*—**Sri N. K. PALANISAMI :** Will the Hon. the Minister for Home be pleased to state—

(*a*) whether any arrangements have been made through the Centre for the import of rice from the Andhra State to this State; and

(*b*) if so, the details thereof?